தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் இரத்ததான முகாம் நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டுநலப் பணித்திட்டம், கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி சங்கம் மற்றும் சாந்தி சமூக சேவை மையம் இணைந்து இரத்ததான முகாம் இன்று (22-8-2015) வேளாண் பல்கலை வளாகத்தில் நடந்தது.

இம்முகாமை துவக்கி வைத்துப் பேசிய வேளாண் பல்கலைக்கழக வேளாண்மை முதன்மையர் முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் இரத்த தானம் செய்யவுள்ள மாணவர்களின் சேவை மனப்பான்மைமைப் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவரும் ரோட்டரி சங்க செயலர் திரு. சசிகுமார், தலைவர் திரு. கிருஷ்ணராஜ், சங்க உறுப்பினர்கள் திரு. பதி, திரு. ஜெயகாந்தன், சாந்தி சமூக சேவை மைய மருத்துவர்கள் டாக்டர் மூர்த்தி மற்றும் டாக்டர் கிருஷ்ணன் குழுவினர் மற்றும் பல்கலைக்கழக மருத்துவர் ஆ. அருள்மொழி ஆகியோர் பங்கேற்றனர்.

சுமார் 50 மாணவ, மாணவியர் ரோட்டரி சங்க செயலர் திரு. சசிகுமார் மற்றும் முன்னாள் நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர் முனைவர் சீனிவாசன் ஆகியோர் இரத்த தானம் செய்தனர்.

தற்போது ஒரு நாளுக்கு தேவைப்படும் இரத்த அளவில் மூன்றில் ஒரு சதவிகிதம்தான் இரத்தம் கிடைத்து வருகிறது. ஒருவர் இரத்தம் கொடுத்தால் அதிலிருந்து பிளேட்லெட், பிளாஸ்மா என்று வகைப்படுத்தி நான்கு பேருக்கு பயனளிக்கும். இரத்தம்

கொடுப்பது உயிருக்கு நிகராகக் கருதப்படுகிறது. குறிப்பாக, மாணவர்கள் இரத்தம் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு இரத்தம் விருத்தியாகும். தற்கால மாணவர்கள் துரித உணவுகள் தவிர்த்து சத்துள்ள பழங்கள், காய்கறிகளை சாப்பிடுவதன் மூலம் மற்றவர்களுக்கு உதவக்கூடிய அளவுக்கு பயனுள்ள மாணவர்களாக இரத்த தானம் செய்ய ஏற்றவராக உருவாகலாம் என்று மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர்.

இம்முகாமை நாட்டுநலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் க. குமுதா, திட்ட அலுவலர்கள் முனைவர் எம்.ஆர். லதா, முனைவர் சக்திவேல், முனைவர் ஹேமா பிரபா, முனைவர் தங்க ஹேமாவதி, முனைவர் குரு மற்றும் ரோட்டரி சங்க செயலர் திரு. சசிகுமார் ஆகியோர் இணைந்து நடத்தினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்